## வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் கம்பனி - 2014

வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் கம்பனி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர – அளவு தொழில் முயற்சிகளிற்கான (எஸ்எம்ஈ களிற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

(அ) **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்- கம்பனி**

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் கம்பனியின் (ஏஎன்சீஎல்) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர – அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

(அ) **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்- தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2.1 மற்றும் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் கம்பனி (ஏஎன்சீஎல்) மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர – அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

கம்பனியின் முழுமையாக உடமையாக்கப்பட்ட துணைக் கம்பனிகளாகவிருந்த வரையறுத்த லேக் கவுஸ் ஆதன அபிவிருத்தி (தனியார்), வரையறுத்த தகவல் ஊடகம் (தனியார்) மற்றும் வரையறுத்த இலங்கை வர்த்தக என்பவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக எடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுத்த தகவல் ஊடகம் (தனியார்) இன் வர்த்தகச் செயற்பாடுகள் ஏற்பட்ட பாரிய நட்டங்கள் காரணமாக 2012 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் இந்த துணைக் கம்பனியின் தேறிய சொத்துக்கள் பாரதூரமாக சீர்கெட்டிருந்தது. எவ்வாறாயினும், துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் தொகுதியானது தொடர்ந்தியங்குகின்றது என்ற ஊகத்தின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப் பட்டிருந்ததுடன் 2007 இன் 07

ஆம் இலக்க கம்பனியினுடைய அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் பிரகாரம், பணிப்பாளரின் விடுவித்தல் கூற்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரையறுத்த வர்த்தக லங்கா ஏஎன் (தனியார்) இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட பாரிய நட்டங்கள் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 87 சதவீதத்தால் தேறிய சொத்துக்கள் குறைவடைந்திருந்ததுடன் கம்பனியானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனியினுடைய அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் பிரகாரம், விடுவித்தல் பரீட்சிப்பு வேண்டுகையை திருப்த்திப்படுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், வரையறுத்த வர்த்தக லங்கா ஏஎன் (தனியார்) இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், துணைக்கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் தொகுதியானது தொடர்ந்தியங்குகின்றது என்ற ஊகத்தின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 சிறிய மற்றும் நடுத்தர – அளவு தொழில் முயற்சிகளிற்கான (எஸ்எம்ஈ களிற்கான) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் கடைப்பிடிக்கப்படாமை

இது தொடர்பில் பின்வரும் கடைப்பிடிக்கப்படாமை மேற்கொள்ளப்படுகின்றன.

| | பிரிவுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | பிரிவு 2.52 | கம்பனியானது வியாபார கடன்கொடுத்தோரை புறம்பாக காட்டப்படாமல் இருக்கின்ற ரூபா 256,560 வரவு மீதியை ஈடுசெய்திருந்தது. |
| (ஆ) | பிரிவு 23.10 | கம்பனியானது வருடாந்த வெளியீட்டு பிரிவு மற்றும் கம்பனியின் வர்த்தக அச்சிட திணைக்களம் என்பவற்றிடமிருந்து பெறவேண்டிய வருமானத்தை புறம்பாக இனங்கண்டு காட்டப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பிரிவு 8.5 | நட்ட மற்றும் ஐயக் கடன் ஏற்பாட்டுக்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பிரிவு 33.9 | வரையறுத்த ஆதன அபிவிருத்தி (தனியார்) கம்பனியால் முன்னரே உடமையாக்கப்பட்ட ஆதனத்தின் பிணையம் நியமத்தால் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

#### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர்களின் பிந்திய வருகைகள் ரூபா 4,252,848 கூட்டு மொத்தத் தொகையான வேறு தண்டப்பணங்கள் என்பன காரணமாக சம்பளக் கழிப்பனவுகள் தண்டப்பண நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அந்த கணக்கிலுள்ள ரூபா 7,829,382 ஆன திரண்ட செலவு மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோராக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திரண்ட நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டவாறு கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் புதினப்பத்திரிகைகளின் சுழற்சியில் ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட திரும்பிய புதினப்பத்திரிகைகளின் பெறுமதிக்காக மீளாய்வாண்டு

தொடக்கம் மற்றும் இறுதியில் சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ரூபா 564,315 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் வருடாந்த வெளியீட்டு திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது புத்தகங்களின் அச்சிடலிற்காக ரூபா 2,190,724 ஆன தொகை ஏற்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தால் அச்சிடப்ட்ட விற்கப்படாத புத்தகங்களின் இருப்புகள் மதிப்பிடப்பட்டிருக்காதுடன் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 4,841,720 பெறுமதியான விற்கப்படாத புத்தகங்களின் இருப்புக்கள் 2015 மே 07 வரை திணைக்களத்தில் இருந்தது.

(ஈ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோருக்கு சமமான தொகை நட்ட மற்றும் ஐயக்கடன்களாக வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், கம்பனியானது கணக்கீட்டு கொள்கைக்கு அமைய நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்காக ஏற்பாடு ரூபா 5,594,856 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டு தவறுகளாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமல் 2012 ஆம் ஆண்டின் போது விளம்பர முகவரால் சேகரிக்கப்பட்ட விளம்பர வருமானத்தில் மீளாய்வாண்டின் போது அவருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 3,623,786 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சில்லறை கடன்பட்டோரின் பெறுமதி அத்திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் தீர்பனவு பதியாமை காரணமாக ரூபா 2,400,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகளிற்கும் இடையில் ரூபா 128,253 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பேரேட்டு மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகளிற்கும் இடையில் வரவு மீதியின் ரூபா 7,017,468 ஆன வித்தியாசம் மற்றும் செலவு மீதியில் ரூபா 6,455,417 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்த்தக அச்சிடல் திணைக்களத்தால் பேணப்பட்ட வருமான பதிவேட்டிற்கும் கணக்கீட்டு முறைமையிலிருந்து உருவாக்கப்பட்ட தொகைகளிற்கும் இடையில் வர்த்தக அச்சிடல் வருமானம் தொடர்பில் ரூபா 21,362,336 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 14 இருப்பு விடயங்கள் இணக்கம் செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் பேரேட்டு மீதிகளின் பெறுமதிக்கும் பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதிகளின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 11,285,183 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

**2.2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது 6 மாதங்களிற்கு மேலாக இருந்த ரூபா 206,489 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,222,975 மற்றும் ரூபா 2,436,958 தொகையான முறையே மாற்றப்படாத வரவு மீதிக் காசோலைகள் மற்றும் மாற்றப்படாத செலவு மீதிக் காசோலைகள் என்பன தெளிவாக்கப்படாமல் கம்பனியின் வங்கிக் கணக்குகளில் இருந்தது. மேலும், மேற்குறிப்பிட்டவற்றில் ரூபா 694,386 ஆன மாற்றப்படாத வரவு மீதிக் காசோலைகள் மற்றும் ரூபா 2,229,191 மாற்றப்படாத செலவு மீதிக் காசோலைகள் 2015 யூன் 30 இல் உள்ளவாறு இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) கடன்பட்டோர்களிடமிருந்து கோரப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், ரூபா 610,844,559 பெறுமதியான மொத்த கடன்பட்டோரில் ரூபா 28,958,545 தொகையான கடன்பட்டோர் அவர்களுடைய மொத்த மீதிகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 7,665,103 பெறுமதியான கடன்பட்டோர் அவர்களுடைய மீதிகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. 2014 மே 31 வரையும் ரூபா 574,220,911 தொகையான ஏனைய கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,527,632 பெறுமதியான 32 திரும்மிய காசோலைகள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 888,313 பெறுமதியான 17 காசோலைகள் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(உ) கம்பனியானது மீளாய்வாண்டின் போது குறித்த கடன்பட்டோர் தொடர்பில் ரூபா 253,665 தொகையான காசோலைகளை ஏற்றிருந்தது. அக்காசோலைகளை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் குறித்த வங்கிக் கணக்கு மூடப்பட்டிருந்ததுடன் அத்தகையவாறு அந்த தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்படாமல் பெறவேண்டியவையாக இருந்தது.

(ஊ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம், வியாபார கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 82,335,592 ஆன தொகை ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 18,820,432 ஆன தொகை அல்லது 21 சதவீதம் அறிவிடமுடியாததாக கருதி சட்ட நடவடிக்கைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

**2.2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 308,238,708 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் இறுதி இருப்புக்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5) ஆம் பிரிவு | அரையாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 114(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | கம்பனியானது ஊழியர்களிடமிருந்து ஊழியர்களிற்கு செய்யப்பட்ட மிகையூதிய கொடுப்பனவுகள் சார்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) கழிக்காமல் செய்யப்பட்ட மிகையூதிய கொடுப்பனவுகளிற்காக ரூபா 5,457,339 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 9.2(ஆ) மற்றும் (ஈ) | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (ii) பிரிவு 9.2(அ) | கம்பனியின் அனுமதிக்கப்பட்ட பதவியணி கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும், 2006 யூலை 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி 2013 முதல் 2016 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (iii) பிரிவு 9.3.1 | ஒவ்வொரு பொது முயற்சிகளும் ஒவ்வொரு பதவிகளிற்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளிற்கான திட்டங்களை வைத்திருக்க வேண்டியதுடன் அத்திட்டங்கள் சபை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் உரிய அமைச்சால் அனுமதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களை வைத்திருக்கவில்லை. எனவே, கம்பனியானது விசேட தொழில்சார் தகைமைகள் தேவைப்பட்ட ஏனைய பதவிகளை விட உயர் முகாமைத்துவ பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு செய்கையில் குறித்த கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளிற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iv) பிரிவு 4.2.6 | மீளாய்வாண்டிற்கான காலாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் உரிய நேரத்தில் உரிய அமைச்சிற்கு அனுப்பப் பட்டிருக்கவில்லை. இறுதி காலாண்டிற்கான அறிக்கைகள் 2015 மே 19 இலேயே அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் 2006 | |
| | வழிகாட்டல் 2.14.1 | கதிர்காமத்தில் ரூபா 32 மில்லியன் பெறுமதியான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு கொள்வனவு குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் நியமனத்திற்காக ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது கம்பனியின் உத்தியோகத்தர்களிற்காக போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு கம்பனியால் ரூபா 74,236,890 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் பிரயாணப் படி, எரிபொருள் படி மற்றும் சாரதிப்படி மற்றும் வாடகை அடிப்படையில் வானங்கள் வழங்குதல் என்பவற்றை நிர்ணயிப்பதற்கு கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.4. போதிய அதிகாரத்தால் மேவப்பட்டிருக்காத கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முறையான மற்றும் உரிய ஆதார ஆவணங்கள் மற்றும் வழங்கப்பட்ட சகல பதிவுகளிற்குமான அனுமதிகள் என்பன இல்லாமல் கணக்குகளில் சரியான சீராக்கல்கள் செய்யும் நோக்கில் மீளாய்வாண்டின் போது ரூபா 17,878,723 கூட்டு மொத்த தொகையான நாளேட்டுப் பதிவுகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பல சந்தர்ப்பங்களில், நாளேட்டுப் பதிவுகள் ஒரே நபரால் உருவாக்கப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னங்கீகாரம் இல்லாமல் அல்லது அடுத்துவரும் மாதத்தின் போது சரிசெய்தல் அடிப்படையில் உத்தியோகத்தர்களிற்கு அவர்களுடைய எரிபொருள் எல்லையை விஞ்சி சில சந்தர்ப்பங்களில் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 73,074,312 ஆன நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 71,877,570 வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் விளைந்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,196,742 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது. வெளிவாரி வேலைகளிற்காக விசேடமாக வர்த்தக அச்சிடல் திணைக்களத்தின் தேறிய வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் புதினப்பத்திரிகைகள் மற்றும்

நாளிதழ்களின் விற்பனைக் கிரய அதிகரிப்பு என்பன மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்த வீழ்ச்சிக்கு பிரதான பங்காற்றியிருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கியமான சில விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விகிதங்கள்** | **2014** | **2013** |
|---|---|---|
| | சதவீம் | சதவீதம் |
| மொத்த இலாப எல்லை | 47.52 | 47.86 |
| இலாப இழிவெல்லை (விற்பனை கிரயத்தில் மொத்த இலாபம்) | 90.55 | 91.81 |
| விற்பனை புரள்வில் நிர்வாக கிரயம் | 37.57 | 36.74 |
| விற்பனை புரள்வில் விற்பனை மற்றும் விநியோக கிரயம் | 9.45 | 9.07 |
| விற்பனை புரள்வில் நிதிக் கிரயம் | 2.37 | 3.86 |
| நடைமுறை விகிதம் | 1.66 | 1.59 |
| விரைவு விகிதம் | 1.10 | 1.13 |

மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த இலாப எல்லை மற்றம் இலாப இழிவெல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 0.34 சதவீதம் மற்றும் 1.26 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**3.3 கம்பனியால் தொடரப்பட்ட சட்ட வழக்குகளும் கம்பனிக்கு எதிராக தொடப்பட்ட சட்ட வழக்குகளும்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கம்பனிக்கு எதிராக 65 சட்ட வழக்குகள் தீர்ப்புக்காக காத்திருக்கின்றதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் கம்பனி செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், தீர்ப்புக்காக காத்திருக்கின்ற கம்பனிக்கெதிராக தொடரப்பட்ட 84 சட்ட வழக்குகள் மற்றும் மேற்குறிப்பிட்ட வழக்ககள் தொடர்பில் தீர்க்கப்படாத கோரிக்கைகள் ரூபா 6,378 மில்லியனாக உள்ளன. ஆனால், மீளாய்வாண்டின் போது நிகழத்தக்க பொறுப்புக்களாக ரூபா 10.6 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 5.9 மில்லியன் அல்லது 555 சதவீதத்தால் ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது.

**3.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

திறனுடைய கடன் சேகரிப்பு நடைமுறை மற்றும் முறையான தொழிற்படு மூலதன முகாமைத்துவ கொள்கை இன்மையால், கம்பனியானது முன்னைய ஆண்டின் போதான தொழிற்படு மூலதன விடயங்களை குறைக்கும் நோக்கத்துடன் வர்த்தக வங்கியிடமிருந்த ரூபா 175 மில்லியன் வங்கி மேலதிகப்பற்றினை பெற்றிருந்தது. அதற்கு மேல், வங்கி மேலதிக பற்று வட்டியாக ரூபா 20.4 மில்லியன் தொகை மற்றும் உயர்ந்த வட்யிலுள்ள கடன்களை தீர்பதிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களின் போது தண்டப்பணமாக ரூபா 446,509 கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது மீளாய்வாண்டின் போது 6 புதினப்பத்திரிகைகள், 25 சஞ்சிகைகள் மற்றும் 3 ஆண்டு வெளியீடுகள் என்பன வெளியிடப்பட்டிருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் போது போது 6 புதினப்பத்திரிகைகள், 22 சஞ்சிகைகள் மற்றும் 03 ஆண்டு வெளியீடுகள் என்பன வெளியிடப்பட்டிருந்தது. புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஆண்டு வெளியீடுகள் என்பவற்றின் தேறிய பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா26 மில்லியனால் குறைவடைந்திருந்தது. கம்பனியால் வெளியிடப்பட்ட ஏழு புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியாக எதிர்மறையான பங்களிப்பை உழைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட 31 புதினப்பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றில் 16 புதினப்பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகள் ரூபா 43 மில்லியனான எதிர்மறையான பங்களிப்பை உழைத்திருந்தது.

(ஆ) ஆண்டின் போது வெளியிடப்பட்ட 31 புதினப்பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் கம்பனியின் நிதிசார் விளைவுகளிற்கான சாதகமான பங்களிப்பை செய்திருந்துது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கம்பனியின் புதினப்பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் ஒட்டுமொத்த விளம்பர வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 38 மில்லியன் அல்லது 1.6 சதவீதத்தல் அதிகரித்திருந்தது.

(ii) கம்பனியின் ஒட்டுமொத்த புதினப்பத்திரிகையின் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டில் ரூபா 408.9 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 383.1 மில்லியனிற்கு அல்லது 6.3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) கம்பனியின் காலரீதியான சுழற்சி வருமானம் முன்னைய ஆண்டில் ரூபா 281.8 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 270.7 மில்லியனிற்கு அல்லது 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iv) கம்பனியின் ஒட்டுமொத்த புதினப்பத்திரிகை விற்பனை வருமானம் சகல புதினப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் முழு அச்சிடப்பட்ட பிரதிகளும் ரூபா 36.8 மில்லியனிலிருந்து ரூபா 35.5 மில்லியன் வரை அல்லது 3.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம் அச்சிட பொருட்களின் கிரயம் மீளாய்வாண்டின் போது ரூபா 968.7 மில்லியனிலிருந்து ரூபா 1,029.7 மில்லியன் வரை அல்லது 6.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், 04 புதினப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பான அச்சிடல் கிரயம் அச்சிடுகின்ற பிரதிகள் குறைவடைந்திருந்த போதிலும் கருத்திற்கொள்ளக் கூடியளவு அதிகரித்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் துணை கம்பனியாகவிருந்த வரையறுத்த வியாபார லங்கா ஏனன் (தனியார்) முன்னைய ஆண்டின் போது அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை

தொடங்கியிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 5.5 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15.7 மில்லியன் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோர் மீதிகளில், ஒரு ஆண்டிற்கு மேலாக ரூபா 5.7 மில்லியன் தொகை நிலுவையாகவிருக்கின்றதுடன் மீளாய்வாண்டின் போது ஐயக் கடனாக கருதப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வருமானம் 6 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோர் மீதிகள் கடன்கள் அறிவிடுகின்ற கொள்கை இன்மை காரணமாக 58 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) வருடாந்த வெளியீட்டு திணைக்களம் விற்பனை அல்லது திரும்புதல் அடிப்படையில் புத்தக சாலைகளிற்கு அதன் வெளியீடுகளை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது உரிய புத்தகசாலைகளிடமிருந்து பெறவேண்டிய தொகைகளை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் 5 - 10 ஆண்டுகளிற்கு லோக எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த சில ஆண்டுகளின் போது நிலவிய குறிப்பிடத்தக்களவான விற்பனை திரும்பல்களை குறைக்கும் நோக்கில் கம்பனியானது காலத்திற்கு காலம் ஒவ்வொரு புதினப் பத்திரிகைகளிற்காகவும் திரும்பல் வீத முறைமைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. முறைமைக்கான புதிய திருத்தங்கள் 2014 ஆகஸ்ட் 01 இல் கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒட்டு மொத்த விற்பனைத் திரும்பல்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 13,910,806 ஆல் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மொத்த விற்பனை சுழற்சி 18 சதவீதத்திற்கு சமமாக இருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோரில், விளம்பர முகவர்கள் ஊடாக பெறப்பட்ட விளம்பரங்களிற்கு பதிலாக 299 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 127,072,845 தொகை பெறவேண்டியதாக இருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 73,627,070 அல்லது 137 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட நிலுவையாகவிருக்கின்ற மீதிகளில், ஒரு ஆண்டிற்கு மேலாக ரூபா 9,069,409 தொகை நிலுவையாகவிருக்கின்றதுடன் அத்தகையவாறு நிலுவையாகவிருக்கின்றதன் அறவீட்டு பொறுப்பு ஐயத்திற்கிடமாகவுள்ளது. எவ்வாறாயினும், அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளாக கம்பனிக்கு நேரடியாக அரசாங்கத்தினுடைய விளம்பரங்களை பெறுவதற்கு கம்பனியானது முறையான நடைமுறையை பின்பற்றுவதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அறவீட்டுக் கொள்கை கிடைக்காமையால் ஐயக் கடன்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. இதன்படி, ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 22.5 மில்லியன் அல்லது 34 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஊ) கம்பனியானது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான பஸ் சேவையிலிருந்து பல நட்டங்களை ஏற்பட்டிருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் போது திரண்ட நட்டங்களாக ரூபா 25,921,679 ஆன தொகை ஏற்பட்டிருந்தது.

(எ) வழமையாக வேலைகளாக, பேப்பர் கட்டினை கம்பனிக்கு வெளியே அச்சிடல் நடவடிக்கைகளிற்காக அவற்றினை பயன்படுத்துவதற்கு முன்னர் வெட்டுவதற்காக அனுப்பியுள்ளனர். 2014 சனவரி 01 இலிருந்து 2014 ஆகஸ்ட் 31 வரையான ஆரம்ப காலத்திற்காக பதிவேடுகள் பூர்த்தியாக்கப்படாமை காரணமாக, அனுப்பிய மற்றும் பெறப்பட்ட நிறையின் வித்தியாசங்கள் காரணமாக ரூபா 3,829,858 ஆன மதிப்பிடப்பட்ட நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

கைத்தொழில் விதிமுறைகளின் பிரகாரம், மொத்த சுழற்சியின் 5 சதவீதம் கழிவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், முன்னைய மூன்று ஆண்டுகளின் போது இது பல புதினப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை விஞ்சியிருந்ததுடன் அத்தகையவாறு அவற்றில் ரூபா 19,017,522 ஆன மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கம்பனியானது விஞ்சிய கழிவுக்காக ரூபா 5,580,954 ஆன மேலதிக கிரயம் ஏற்படுவதற்கு இருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

விளம்பர முகவர்களுடைய விளம்பர சேகரிப்புகளின் அடிப்படையில் 2.5 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையிலான வீச்சிற்கு அவர்களுக்கான தரகு கொடுப்பனவுகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 11,799,436 மற்றும் ரூபா 12,491,960 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுக்கான ஊக்குவிப்பாக விளம்பர முகவர்களிற்காக ரூபா 2.8 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பேரேட்டு கணக்கில் ஊக்குவிப்பாக ரூபா 3,387,971 ஆன தொகை அல்லது ரூபா 587,971 ஆன மிகைத்தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 17 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக விளம்பர முகவர்களின் ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 8,176,736 ஆன தொகை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் நிதியின் அங்கீகாரத்துடன் விசேட விளம்பர முகவர்களிற்காக ஊக்குவிப்பாக ரூபா 3,623,786 ஆன மேலதிக தொகை வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் செய்யப்பட்ட ஏற்பாட்டின் அடிப்படை 2012 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை பெறுவதற்காக பொருத்தமுடையதாக வேறு முகவரகள் உள்ளமையால் கணக்காய்வில் ஐயத்திற்கிமாக உள்ளது.

(இ) வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பில் விளம்பர முகவர்களுடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சகல வெளியீடுகளையும் மேவுகின்ற தற்போதைய வீத அட்டை வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் கம்பனியில் 10 சதவீத கழிவு விங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 10 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையான கழிவுகள் அவர்களுடைய விளம்பர சேகரிப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

### 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

வரையறுத்த லேக்கவுஸ் ஆதன அபிவிருத்தி (தனியார்) இற்கு உடமையாக்கப்பட்ட ஹொகந்தரவில் அமைந்திருந்த 8 ஏக்கர் பரப்பளவுள்ள காணி 1985 ஆம் ஆண்டிலிருந்து குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் பயனற்று இருந்தது.

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ''தனமுத்து'' சஞ்சிகையின் தலைவர் மற்றும் பிரதம எழுத்தாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டின் போது 7 கல்விசார் வெளியீடுகளில் 21,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா

889,350 பெறுமதியான 13,475 பிரதிகள் அச்சிடப்பட்ட பிதிகளின் மிகை மதிப்பீடு காரணமாக 2015 மே 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் இருந்தது. மேலும் புத்தக கடைகளிற்கு விநியோகிக்கப்பட்ட 6,500 பிரதிகளில் ரூபா 258,588 பெறுமதியான 3,918 பிரதிகள் திருப்பியனுப்பப்பட்டிருந்ததுடன் அவை பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இல் லங்கா புவத்தில் ரூபா 1.2 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கம்பனியானது 2015 மே 30 வரை அவற்றில் எவ்வித பெறுகைகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏற்பட்ட பாரிய நட்டம் நட்டங்கள் காரணமாக 2012 ஆம் ஆண்டின் போது அதன் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்த முழுமையாக உடமையாககப்பட்ட அதன் துணைக் கம்பனியொன்றான வரையறுத்த இன்போ மீடியா (தன்யார்) மற்றும் வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் கம்பனி மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோருக்கு செலுத்தவேண்டிய ரூபா 604,100 ஆன நிலுவையாகவிருந்த தொகையை தீர்ப்பனவு செய்திருந்தது. இதன்விளைவால் கம்பனிக்கு ரூபா 6.9 மில்லியன் தொகையான முதலீடு செய்யப்பட்ட முதல் மற்றும் வழங்கப்பட்ட மேலதிக நிதிகள் இழக்கப்பட்டுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கம்பனியானது பணிப்பாளர் சபையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் கம்பனிக்கு ஒரே பொருட்களை வழங்கியிருந்த வழங்குநருக்கு கடன் அடிப்படையில் ரூபா 30,596,049 பெறுமதியான அச்சிடல் பொருட்களை மீள வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது வழங்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட பொருட்கள் தொடர்பில் வட்டி மற்றும் தண்டப்பணமாக ரூபா 735,807 ஏற்படுத்துவதற்கிருந்தது.

(இ) கம்பனியானது ஏலவிற்பனை ஊடாக மீளாய்வாண்டின் போது ரூபா 5.9 மில்லியன் பெறுமதியான ஆறு வாகனங்களை கைதவிர்ப்பு செய்திருந்தது. அந்த ஆறு வாகனங்களில் நான்கு வாகனங்கள் கைதவிர்ப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் போது படிமுறைகள் எடுத்திருந்த போதிலும் அதனை செய்வதற்கு தவறியிருந்தது. எனவே, 2012 ஆம் ஆண்டின் போது சொல்லப்பட்ட 04 வாகனங்களை கைதவிர்க்காமை காரணமாக ரூபா 2.5 மில்லியன் தொகை இழந்திருந்தது.

(ஈ) ரூபா 241,974 பெறுமதியான மை இருப்புகள் காலவதியாகி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

(உ) விளம்பர முகவர்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட அரசாங்க விளம்பரங்கள் சார்பில் இரண்டு வித்தியாசமான வீதங்களிற்காக வாடிக்கையாளர் மற்றும் விளம்பர முகவர்களிற்கு இரண்டு விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், இது கம்பனிக்கு நேரடியாக அரசாங்க விளம்பரங்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அல்லது 2008 திசெம்பர் 24 ஆந் திகதிய 08/2253/338/043 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு தவறியிருந்தமை என்பதிலிருந்து கம்பனியானது விளம்பர வருமானத்திலிருந்து அண்ணளவாக 30 சதவீதத்தை இழந்திருந்தது.

### 4.8 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது கம்பனியானது கதிர்காமத்தில் யாத்திரிகர் ஓய்வு இல்லங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாண வேலைகள் உடன்பட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கம்பனியானது நியமிக்கப்பட்ட ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட போலியான மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு கொடுப்பனவுகளை செய்திருந்ததுடன் அத்தகையவாறு கம்பனியானது அண்ணளவாக ரூபா 7 மில்லியன் நட்டங்களை அடைந்திருந்தது.

(iii) கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம், ஒப்பந்தகாரர் மர வேலைகள் மற்றும் கொங்றீட் வேலைகள் தொடர்பில் தேவைப்பட்ட விதப்புரைகளை இணங்குவதற்கு தவறியிருந்தது என வெளிப்பட்டது.

(iv) ஒப்பந்த வேலைகளின் எதிர்பார்த்த தரத்தினை பேணும் நோக்கில் ஒப்பந்த காலத்தின் போது ஆலோசனை நிறுவனத்தால் ஒப்பந்த வேலைகளின் கண்காணிப்பு முறைப்படி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

**4.9 ஏனைய நிறுவனங்களிற்கு கம்பனியின் மனித மற்றும் பௌதீக வளங்களை விடுவித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வெளி நிறுவனமொன்றிற்கு இரண்டு உதவி முகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவிக் காசாளர் உள்ளடங்கலாக பத்து உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். கம்பனியானது அவர்களின் சார்பில் சம்பளங்கள், கூலிகள் மற்றும் படிகளாக ரூபா 6,377,850 தொகை செலவழித்திருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக கம்பனியின் மூன்று வாடகைக்கு பெறப்பட்ட வாகனங்களை ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியானது அந்த வாகனங்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது வாடகை மற்றும் எரிபொருளாக முறையே ரூபா 1,740,000 மற்றும் ரூபா 1,488,240 தொகை செலவழித்திருந்தது.

**4.10 ஆளணி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 228 பதவியணியினர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்புகளிற்காக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர்களின் ஆட்சேர்ப்பகள், பதவியுயர்வுகள் மற்றும் பதவியிறக்கல்களிற்காக முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) அனுமதிக்கப்பட்ட சம்பள மட்டங்களை பின்பற்றாமல் ஊழியர்களிற்கு மிகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில், தலைவர் மற்றும் பிரிவு தலைவர்களால் செய்யப்பட்ட தனிப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் சம்பள அதிகரிப்பகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனை செவ்வையின் பிரகாரம், உயர் முகாமைத்துவத்திற்கான ஆட்சேர்ப்பு அத்தகைய பதவிகளிற்கான

வேண்டப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை மதிப்பாய்வு செய்யாமல் செய்யப்பட்டிருந்தது.

(உ) நிதி முறையேடுகள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய கம்பனியால் ஏற்பட்ட நிதி நட்டங்களை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் படி, கம்பனியால் 2013 – 2016 வரையான காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிக்கவில்லை. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய தற்போதைய வளங்கள், தாபன கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கப்பட்டிருக்காத முன்னைய முன்னைய ஆண்டு செயற்பாட்டு விளைவுகள் போன்ற எதிர்கால ஒன்றிணைந்த குறிக்கோள்களை அடைதல், குறிப்பாக புதிய ஊடக துறைக்குள் நுழைவதற்கு வடிவமைக்கின்ற உபாயங்கள், செயற்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தலின் அமுலாக்கல், உற்பத்தி தரத்தினை அதிகரித்தல் போன்ற எதிகால முக்கியத்துவம் மீளாய்வாண்டின் போது முகாமைத்துவத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்துடன் இணைந்து மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சகல புதினப்பத்திரிகைகளின் விற்பனை சுழற்சியை அதிகரித்தல், ஐரீ தரவுசெயற்படுத்தல் மற்றும் வலையமைப்பின் விரிவாக்கலும் நவீனமயப்படுத்தலும் போன்றன நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது அமலூக்க வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது, அத்துடன் இலக்கிடப்பட்டவாறு ஒருங்கும் ஊடகத்துறையின் அதிகளவான துடிப்பான வெளியீட்டாளர் உருவாகுதல் அடையப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான விரிவான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கொள்வனவு திட்டமொன்றை வைத்திருக்காமல், மீளாய்வாண்டின் போது கம்பனியால் மூலதன விடயங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 68.8 மில்லியன் தொகையான மூலதனச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பிரிவின் பிரகாரம், பாதீடு தயாரிப்பதற்கான கால இலக்கு மற்றும் உரிய அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்போருக்கு அதன் வேண்டுகையை சமர்ப்பித்தல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவினங்கள் வகுதிக்கு அமைய பாதீடு மீது வினைத்திறனான கட்டுப்பாட்டை செய்யும் நோக்கில் கம்பனியின் விரிவான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான செலவினங்களிற்கு இடையில் கருத்திற்கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டன.

**5.5 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையிலிருந்து வலியுறுத்தப்பட்டிருந்த பின்வரும் விடயங்களிற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) பணிப்பாளர் சபையின் அனுமதி இல்லாமல் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெறல்.

(ii) கேள்வி கோராமலும் உடன்படிக்கை கைசாத்திடாமலும் வாகனங்கள் பெறல்.

(iii) வரையறுத்த லேக்கவுஸ் ஆதன அபிவிருத்தி மற்றும் வரையறுத்த இன்போ மீடியா (தனியார்) என்பவற்றில் செய்யப்பட்ட முறையே ரூபா 7,500,000 மற்றும் ரூபா 2,500,000 ஆன முதலீடுகள் மீது எவ்வித நலன்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆண்டு வெளியீட்டின் வருமான அங்கீகாரம்

(ஆ) 2013 திசெம்பர் 09 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட பின்வரும் நெறிப்படுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த கொள்வனவு திட்டம் சமர்ப்பிப்பதற்கு

(ii) ரூபா 1.2 மில்லியன் தொகையான லங்கா புவத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்
(ஆ) வாகனப் பாவனை
(இ) கடன்பட்டோர் முகாமைத்துவம
(ஈ) பொருளிருப்புக் கட்டுப்பாடுககள்
(உ) அதிகாரக் கையளிப்பு
(ஊ) வர்த்தக அச்சிட வேலைகள்
(எ) நிலையான சொத்துக்கள்மீதான கட்டுப்பாடு
(ஏ) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்
(ஐ) சுழற்சி- திரும்பல்
(ஒ) மனிதவள முகாமைத்துவம்
(ஓ) கொடுப்பனவு அடியிதழ் முறைமை